**செப்டம்பர் - 9**

**"ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி..." - பிலி 2 : 14, 15.**

சத்தியத்தைப் பரப்புவதில் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அப்பிள்ளைகளின் மேலுள்ள கடமையாயிருக்கிறது. தன்னுடைய விளக்கை ஆயத்தப்படுத்தப்பட்டதாகவும் எரிந்து கொண்டிருக்கிறதாகவும் வைத்திருந்து அதைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். "ஆயத்தப்படுத்தப்பட்டதாகவும் எரிந்துகொண்டிருக்கிறதாகவும்" என்பது எதைக் குறிக்கிறது என்றால், ஜீவ வசனங்களுக்கு நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும், சத்தியத்தின் சரியான அறிவுக்கு நாம் வர வேண்டும் என்றும், நாம் கவனமாகவும் உண்மையாகவும் தவறின எல்லா அடையாளத்தையும் அது உபதேசத்தின் தவறாய் இருந்தாலும் சரி அல்லது நமது அன்றாட நடத்தையிலும் சம்பாஷணையிலும் ஏற்படுகிற தவறாய் இருந்தாலும் சரி, அது இருக்கிறதாக தெரிந்த உடனே விரைவில் அதைக்களைய வேண்டும் என்றும் இது குறிக்கிறது. இதன் பலனாக தெய்வீக சத்தியத்தின் சுத்தமான வெளிச்சம், குறைந்த இடையூறோடு குற்றமற்ற தெளிந்த குணத்தின் ஊடகத்தின் ஊடே பிரகாசிக்கும். **- Z ’03, 358 (R 3243)**

நம்மில் திராணி இருக்கும் வரை நாம் குற்றத்திற்கு ஆளாகாதபடியும், கெடுதி விளைவிக்கக் கூடாதவாறும், நம்முடைய நடத்தையைத் தடுப்போமாக. ஆகையால் நன்மை செய்வதில் இடைவிடாமல் ஈடுபட்டவர்களாக கர்த்தரைப் போல நாம் இருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். பிறகு நம்மிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால், அது நம் பங்கின் காரணத்தாலில்லாமல் ஆனால் குற்றம் கண்டுபிடிப்பவர்களின் இருதயத்திலோ அல்லது மனதிலோ உள்ள தவறான நிலைமையின் காரணத்தால் ஏற்பட்டதாயிருக்கும். நமது கர்த்தரைப் போல தீமையின் மத்தியிலும், தீங்கு செய்யாமல் ஆசிர்வதிக்க நாடிக்கொண்டு உலகத்திலே வெளிச்சத்தைப்போல பிரகாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடைய வெளிச்சத்துக்காக இருளின் பிள்ளைகளிடமிருந்து வெறுப்பைப் பெறுவோமானால், நமது கர்த்தரின் இப்படிப்பட்ட அனுபவங்களை நினைவு கூறுவது நமக்கு நன்மையாயிருக்கும். அவரைப்போல சில ஜனங்களால் விலக்கப்படும் பொழுது, மற்ற ஜனங்களை நம்முடைய உலகப்பிரகாரமான அல்லது பரத்துக்கடுத்த நன்மையினால் ஆசிர்வதிக்க இன்னமும் நாடலாம். இப்படிச் செய்வது நமது சிலாக்கியமாயிருக்கிறது. **- P ’26, 125.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எபே 5:1,2; மத் 5:45-48; லூக் 6:27-36; 1பேது 2:12; உபா 32:5; மத் 5:14,16; எபே 5:8; சங் 27:1; 36:9; யோவா 1:9; 8:12; 12:46; 2கொரி 4:6; 1தெச 5:5; 1யோவா 2 :10.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 28 (R 5388).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவற்றின் பலாபலன்களும், பாடங்களும் எவை?**